கிறது. நீதிமன்றத் துறையில் தலையிடுகின்ற எத்தகைய தன்மையும் இருக்கக் கூடாது என்பதுதான் இன்றைக்கு இருக்கும் அரசியல் சட்டத்தின் நோக்கமாகும். அதைப்போன்றே சட்டமன்றத்தின் உரிமைகளில் நீதிமன்றமும் தலையிடக் கூடாது. அது காப்பாற்றப்படவேண்டும் என்ற முறையில் பல்வேறு முறைகளில் இந்த அவையின் மூலம் நாம் அதைத் தெரிவித்து இருக்கிறோம்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : தலைவர் அவர்களே, நீதித் துறையில் அகில இந்திய சர்வீஸ் ஏற்படுத்துவதற்கு மத்திய அரசு கூறும் காரணங்கள் என்ன? ஆல் இந்தியா சர்வீஸ் என்று கொண்டு வருவதன் மூலம் இந்தியைப் புகுத்தவேண்டும் என்ற அடிப்படை நோக்கம் உண்டா என்பதை மாநில அரசு உணருகிறதா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே தெரிவித்தேன். அதற்கான காரணங்களை அவர்கள் குறிப்பிட்டுக் கேட்கவில்லை. ஆல் இந்தியா அமைப்பாக அதை ஆக்குவதற்கு மத்திய அரசு, மாநில அரசு மற்றும் உயர்நீதிமன்றத்தின் கருத்துக்களைக் கேட்டு இருக்கிறார்கள். ஐ.ஏ.எஸ். என்ற அமைப்பின் கீழ் அகில இந்திய முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு, பிற மாநிலத்தவர்கள் இங்கே வருவதும், நம்முடைய மாநிலத்தில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அங்கே போவதும் என்பது தற்போது இருக்கிறது. அம்மாதிரி இருப்பதால் நடைமுறையில் பல்வேறு இடைப்பாடுகளை நாம் காண்கிறோம். எவ்வளவுக்கெவ்வளவு அதிகமான துறைகளில் ஆல் இந்தியா சர்வீஸ் கொண்டு வர முடியும் என்பதை மத்திய அரசு முயற்சித்துக் கொண்டு இருக்கிறது. இருப்பினும் அப்படிப்பட்ட நேரங்களில் எல்லாம் நாம் நம்முடைய கருத்தை வலியுறுத்திக் கொண்டு வருகிறோம். மாநிலங்கள் சுயாட்சி பெற வேண்டும், மாநிலங்கள் அதிக அதிகாரங்கள் பெறவேண்டும் என்று வற்புறுத்தி வருகின்ற நோக்கத்திற்கும் இது மாறுபாடாக இருக்கிற காரணத்தால் ஒவ்வொரு கட்டத்திலும் இதற்கு இடம் அளிக்க நாம் தயாராக இல்லை என்பதை அழுத்தம் திருத்தமாக வலியுறுத்தி வருகிறோம்.

திரு. வி. க. நினைவு அஞ்சல் தலை வெளியிடுவதற்கான கோரிக்கை.

266—(* வினா எண். 17215)—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திரு. வி. க. நூற்றாண்டை முன்னிட்டு திரு. வி. க. நினைவு அஞ்சல் தலை வெளியிட மாநில அரசு மத்திய அரசைக் கேட்டுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆம்.